**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.324/2021**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | :LW11/Pw5 |
| Name | : சக்தியராஜ் |
| Father/Husband's Name | : கலைக்கோவன் |
| Village | :எக்மோர் |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 38 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20.05.2026.

**முதல் விசாரணை:**

நான் தற்போது State Bank, Egmore கிளையில் துணை கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2015ம் ஆண்டு எங்கள் வங்கியில் பணிபுரிந்த யோகராஜ் என்பவர் தற்போது பணி ஓய்வு பெற்று சென்றுவிட்டதால் அவருக்காக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கும் படி அங்கீகாரம் செய்து எனக்கு கடிதம் கொடுத்துள்ளதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். அந்த அங்கீகார கடிதம் **அதசா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

20.03.2015ம் தேதி அன்று மேற்சொன்ன யோகராஜ் என்பவர் பணியில் இருந்த போது காஞ்சிபுரம் மாவட்ட குற்ற பிரிவு போலீசார் எதிரி குற்றத்தின் போது பயன்படுத்திய பணபரிவர்த்தனை (ஸ்டேட்மன்ட்) சம்மந்தமாக வேண்டுகோள் கடிதம் கொடுக்கப்பட்டு அதன் பேரில் 20.03.2015, 23.03.2015 ஆகிய தேதிகளில் அரசளூர் , ஈரோடு மாவட்டம் State Bankல் இருந்து ரத்தனசாமி

அவருடைய வங்கி கணக்கு எண் 2011007015 வங்கியில் இருந்து 20.03.2015 அன்று ரூ.3,00,000/- , 23.03.2015 அன்று ஐந்து தவணையாக ரூ.40,000X5= ரூ.2,00,000/- நித்யாநந்தம் அவருடைய State Bank வங்கி கணக்கு எண் 30848888420 க்கு பணம் பரிவர்த்தனை மேற்படி தேதியல் செய்யப்பட்டுள்ளது. அந்த Statement **அதசா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்னர் ராஜேந்திரன் என்பவருடைய அரசலூர் , ஈரோடு மாவட்டம் State Bank ல் இருந்து வங்கி கணக்கு எண் 30771425604 லிருந்து 23.03.2015 அன்று ரூ.1,20,000/- நித்யாநந்தம் அவருடைய State Bank வங்கி கணக்கு எண் 30848888420 க்கு பணம் பரிவர்த்தனை மேற்படி தேதியல் செய்யப்பட்டுள்ளது. அந்த Statement **அதசா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 01.03.2015 முதல் 05.05.2015 வரை உள்ள பரிவர்த்தனைகளை கொண்டுள்ளது. போலீசார் அவரை விசாரணை செய்திருந்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. இரண்டாவது எதிரி நித்யாநந்தன் வங்கி கணக்கிற்கு தான் பண பரிவர்த்தனை நடந்தது என்றால் சரிதான். 3 வது எதிரி தேவேந்திரன் என்பவரின் வங்கி கணக்கு Statement என்னிடம் இல்லை. 3 வது எதிரி தேவேந்திரன் வங்கி கணக்கு வைத்திருக்கிறாரா மற்றும் மற்ற விவரங்கள் எனக்கு தெரியாது. இந்த வங்கி கணக்கு நித்யாநந்தத்தின் சம்பள வங்கி கணக்கு என்றால் சரிதான். நித்யாநந்தன் வங்கி கணக்கில் ஏற்கனவே இது போன்ற பண பரிவர்த்தனை சம்மந்தமாக ஏதேனும் விவரங்கள் இருக்கிறதா என்றால் இல்லை. 2 வது எதிரி நித்யாநந்தனுக்கு இதே போன்று வேறு வழக்குகளில் பண பரிவர்த்தனை சம்மந்தமாக நானோ எனக்கு முன் இருந்த அதிகாரியோ சாட்சியம் அளித்திருக்கிறார்களா என்றால் நான் அளிக்கவில்லை. எனக்கு முன் இருந்த அதிகார் சொல்லி இருக்கிறாரா என்று எனக்கு தெரியாது.

2. எதற்காக GCC மூலம் 12.30-1.30 மணியளவில் பணபரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளது. எதற்காக அவ்வாறு செய்யப்பட்டுள்ளது என்றால் GCC

மூலமாக சுலபமாக பணபரிவர்த்தனை செய்ய முடியும் என்பதால் அந்த முறையை பயன்படுத்தி இருக்கலாம். வங்கி பதிவேடுகள் பணபரிவர்த்தனை மட்டும் தான் காண்பிக்கும், எதற்காக என்று பதிவுகள் இருக்காது என்றால் சரிதான். அந்த பணபரிவர்த்தனை ரயில்வேக்காக நடந்தது என்பதைக் குறித்து எந்த ஆதாரமும் இல்லை என்றால் சரிதான். வங்கி பதிவேட்டுகளை வைத்துக்கொண்டு பணபரிவர்த்தனை நடந்ததை மட்டும் தான் சொல்ல முடியும், எந்த நோக்கத்திற்காக என்று சொல்ல முடியாது என்றால் சரிதான்.

3. நான் 15 வருடங்களாக இந்த துறையில் வேலை செய்து வருகிறேன். வங்கி கணக்கில் பணத்தை போட்டு விட்டு வங்கி கணக்கின் உரிமையாளரை பிரச்சனையில் மாட்டிவிடும் சம்மந்தமாக நான் ஏதேனும் வழக்குகளை பார்த்திருக்கிறேனா என்றால் இல்லை. எங்களிடம் நித்யாநந்தம் ரயில்வேயில் வேலை வாங்கி தருவதாக சொல்லப்படும் சம்பவத்தை குறித்து ஏதேனும் ஆவணங்கள் இருக்கிறதா என்றால் இல்லை. இருத்தரப்பினருக்கு இடையே என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது Statement வைத்து சாட்சி அளிக்கிறேன். இது வங்கி கிளைக்கு வந்து வங்கு கணக்கின் உரிமையாளர் நேரடியாக வந்து தான் GCC மூலம் பண பரிவர்த்தனை செய்திருக்க முடியும். 2வது மற்றும் 3வது எதிரிகள் வங்கி கணக்கின் பணபரிவர்த்தனை மட்டும் தான் சொல்ல முடியும் எதற்காக என்ற விவரம் சொல்ல இயலாது.

மறுவிசாரணை இல்லை

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu